2024 ஜூன் 29]

அடையார் bus depot *வந்துள்ளது. ஆனால், இஸ்லாமியர்களுக்கு ஒரு கபர்ஸ்தான் கேட்கும்போது கிடைப்பதில்லை. தயவுகூர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துறையின் அமைச்சர் அவர்களுக்கும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து, ஒரு* joint survey *செய்து, இஸ்லாமியர்களுக்கென்று ஒரு கபர்ஸ்தான் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Waqf *வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் கபர்ஸ்தான் அமைத்துத் தர வேண்டுமென்ற சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை, உடனடியாக வருகின்ற காலங்களில் நடைபெறுகின்ற* Waqf *வாரியத்தின் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அந்த இடம் போதுமான அளவிற்கு ஒதுக்குவதற்கு வாய்ப்புள்ள இடமாக இருந்தால், உடனடியாக ஒதுக்கித் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பெயரில் வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். எல்லோருமே கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருக்கிறீர்கள். குறைந்த நாட்கள் சட்டமன்றக் கூட்டம் நடந்தாலும், காலை, மாலை இரண்டு வேளைகளிலும் எல்லா மானியக்*

கோரிக்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு, விவாதம் முறையாகச் செய்து, எல்லோருக்கும் போதிய அளவு நேரமும் கொடுத்து, விவாதித்து, அதற்குப் பிறகுதான், வாக்கெடுப்பிற்கு விட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால், கவன ஈர்ப்பு தீர்மானங்கள் எடுத்தது கொஞ்சம் குறைவுதான். இன்று நீங்கள் எல்லோரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒரு விஷயத்தைப் பற்றி தகவல் கோரல் என்ற முறையில், ஒரு நிமிடத்திற்குள் அரசின் கவனத்தை ஈர்த்து அமரவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் உங்கள் கோரிக்கையினை கூறுங்கள். (குறுக்கீடு) அது தவறு.*

திரு. ஜி.கே. மணி: *அதற்கான* **

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதை நீங்கள் ஒரு நிமிடம் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதை நீங்கள் ஒரு நிமிடம் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் உங்களுக்கு மைக் தருகிறேன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) பேசுகிறீர்களென்றால், கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் நீங்கள் என்ன எழுதியிருக்கிறீர்களோ, அதை மட்டும் வாசித்துவிட்டு அமர வேண்டும். அவ்வளவுதான். அதைத் தாண்டி* debate*-க்கு நான்* allow *செய்ய மாட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது. அதனால் தயவுசெய்து அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைத் தாண்டி பேசினால், நான்* allow *செய்ய மாட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் இருப்பதை மட்டும் வாசித்துவிட்டு, அவையின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) மீதமுள்ளவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2024 ஜூன் 29]

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இதையெல்லாம் நீங்கள் பேசினால், எல்லாமே அவைக் குறிப்பில் ஏறாது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் நீங்கள் பேசுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: ****

(ஆ) நெல்லுக்கான ஊக்கத்தொகை ஜூலை முதல் உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா பகுதியில் மிகக் கடுமையான சவால்களுக்கு மத்தியில் கோடைக்காலத்தில் பயிர்களை பயிர் செய்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெல்லுக்கான ஊக்கத்தொகை 1-9-2024 முதல் அமல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை 1-7-2024 முதல் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.*

(இ) பண்ருட்டி தொகுதி, கலை, அறிவியல் கல்லூரி மற்றும் வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தளபதி அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்று, நான்காண்டுகளுக்கான நிதிநிலை*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.